StudentBounty.com

# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

## SUMMATIVE ASSESSMENT - I ( 2012 - 2013 )

**CLASS : X**

**Time : 3 hours** **TAMIL** **Maximum Marks : 90**

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 90

# தமிழ்

குறிப்பு - 1 ) கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும்.

2 ) விடைகள் தெளிவாகவும், அழகாகவும் உரிய பக்க எண்களுடன் இருத்தல் வேண்டும்.

3 ) மாணவர்களின் அறிவுத்திறனுக்கு ஏற்ப சொந்த நடையில் பக்கத் தலைப்புகளுடன் கட்டுரை எழுதுதல் வேண்டும்.

4 ) உரிய வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

5 ) வினாத்தாள் 10 பக்கங்களை உடையது.

## பகுதி - I

**அ ) பின்வரும் பத்திகளைப் படித்து, தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

திருக்குற்றாலத்தின் அருகே சிறந்த ஊர்கள் சில உண்டு. வடநாட்டுக் காசிக்கு நிகரான தென்காசி என்னும் ஊர் அதற்கு மூன்று மைல் தூரத்தில் உள்ளது. பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தென்பாண்டி நாட்டில் ஆட்சி புரிந்த பராக்கிரம பாண்டியனால் தென்காசிக் கோவில் கட்டப்பட்டதெனச் சாசனம் தெரிவிக்கின்றது. அரசாளும் உரிமையும், அருந்தமிழ்ப் புலமையும் ஒருங்கே வாய்ந்த அதிவீரராம பாண்டியர் தென்காசியில் இருந்து நைடதம் முதலிய தமிழ் நூல்களை இயற்றினார் என்பர். திருக்குற்றாலத்திற்கு அண்மையில் உள்ள சிற்றூர்களில் ஒன்றான மேலகரம் என்ற ஊரில் திரிகூட ராசப்பர் 'குற்றாலக் குறவஞ்சி' நாடகத்தை இயற்றினார்.

**<u>வினாக்கள்</u>** **5**

**1 ) வடநாட்டுக்காசிக்கு நிகரான ஊர் எது ?**

அ ) திருவேங்கடம் ஆ) திருக்குற்றாலம்

இ ) திருவாவினன்குடி ஈ ) தென்காசி

**2 ) அதிவீரராம பாண்டியர் தென்காசியில் இருந்து இயற்றிய நூல் எது ?**

அ) நைடதம் ஆ) மலரும் மாலையும்

இ) தமிழ் விடு தூது ஈ) குறிஞ்சிப்பாட்டு



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

**3 ) பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தென்பாண்டி நாட்டை ஆட்சி புரிந்த மன்னன் யார் ?**

அ) சேரன் செங்குட்டுவன் ஆ) பொற்கை பாண்டியன்

இ ) பராக்கிரம பாண்டியன் ஈ) இரண்டாம் குலோத்துங்கன்

**4 ) குற்றாலக்குறவஞ்சியின் ஆசிரியர் யார் ?**

அ) சீத்தலை சாத்தனார் ஆ) ஒட்டக்கூத்தர்

இ) அதிவீரராம பாண்டியர் ஈ) திரிகூட ராசப்பர்

**5 ) குற்றாலக்குறவஞ்சி நாடகம் இயற்றப்பட்ட ஊர் எது ?**

அ) வடகாசி ஆ) மாயாவரம்

இ) மேலகரம் ஈ) மருதூர்

**ஆ)** 'அரிது அரிது மானிடராதல் அரிது' என்றார் ஔவைப் பிராட்டியார். பெறற்கரிய மனித உடம்பைப் பெற்றவர்கள் தங்களுக்காக மட்டுமே வாழாமல், பிறர்க்காகவும் வாழ்வதே மானிடப் பிறப்பின் பயனாகும். தமக்கென முயலாத வலிய முயற்சியோடு பிறர்க்கென முயல்வோர் இருப்பதனால் இந்த உலகம் இருக்கிறது என்று இளம்பெருவழுதி என்னும் அரசனது புறநானூற்றுப் பாடல் குறிக்கின்றது. ததீசி என்னும் முனிவர் தேவர்களின் நன்மைக்காகத் தம் முதுகு எலும்பையே கொடுத்தார் என்று ஒரு புராணக்கதை கூறுகிறது. ஒருவர் அல்லது சிலர், பிறர் நன்மைக்காகப் பயன் கருதாது உதவி புரிவதே தொண்டு ஆகும். ஊதியம் கருதாது பணி புரிவதையே இச்சொல் குறிக்கும். திருநாவுக்கரசர் புல் செதுக்கும் கருவியால் கோயில்களில் புல்லும், முள்ளும் வளர்ந்து கோயிலுக்குச் செல்பவர்களுக்கு அல்லல் விளையாதவாறு அவற்றைச் செதுக்கும் பணியில் ஈடுபட்டார். இதனோடு மக்களைக் கடவுள் பற்றுக் கொள்ளவும் செய்தார். இவ்வெடுத்துக்காட்டுகளால் நம் நாட்டு மக்களிடம் தொண்டு செய்யும் மனப்பான்மை முன்னரே இருந்ததை அறிகிறோம்.

**<u>வினாக்கள்</u>** **5**

**1 ) மானிடப்பிறப்பின் பயன் யாது ?**

அ) அரிதாக பிறத்தல் ஆ) பிறர்க்காகவும் வாழ்தல்

இ) தமக்கென வாழ்தல் ஈ) ஆடம்பரமாக வாழ்தல்

**2 ) இளம்பெருவழுதியின் பாடல் இடம்பெற்ற நூல் எது ?**

அ) சிலப்பதிகாரம் ஆ) அகநானூறு

இ) புறநானூறு ஈ) கலிங்கத்துப்பரணி

**3 ) தொண்டு என்றால் என்ன ?**

அ) ஊதியம் கருதாது பணி புரிவது ஆ) ஊக்கமுடன் பணி புரிவது

இ) அயராது பணி புரிவது ஈ) ஓய்வின்றி பணி புரிவது

**4 ) அல்லல் - பொருள் தருக.**

அ) கொடுத்தல் ஆ) முயற்சி

இ) மகிழ்ச்சி ஈ) துன்பம்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

5 ) **தேவர்களின் நன்மைக்காகத் தம் முதுகெலும்பைக் கொடுத்த முனிவர் யார் ?**

அ) திருநாவுக்கரசர் ஆ) ஔவைப் பிராட்டியார்

இ) ததீசி ஈ) இளம்பெருவழுதி

இ ) 'கற்றோர் கண்ணுடையர் கல்லாதோர் புண்ணுடையர்' என்பது வள்ளுவர் மொழி. இந்தியாவில் பெரும்பாலான மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். கிராமங்களில் வாழ்வோர் தங்களுக்குச் சில கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளனர். அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்பது விதியாகும். பெண்கள் அதிகம் படிக்க வேண்டியதில்லை என்ற எண்ணம் இன்றும் கிராமங்களில் நிலவி வரும் கொள்கையாகும். சிலர் படித்த பெண்கள் வீட்டு வேலைகளைச் செய்யமாட்டார்கள் என்று கூறி வருகின்றனர். அதனால் பெண்கல்வி அங்கே போதிய வளர்ச்சி பெற முடிவதில்லை.பெண்கள் கல்வியில் மேம்படாத காரணத்தால் குடும்பமே கல்வியறிவில் உயர்வு பெற வழியின்றி போய் விடுகிறது. சுகாதாரம், குடும்ப வரவு செலவு, குழந்தைகள் மேம்பாடு ஆகியவற்றைச் சிறப்புடன் பேணக் கிராமப்பெண்கள் நூறு சதவிகிதம் கல்வி கற்றல் அவசியமாகும். அரசாங்கம் அதற்கான சிறப்பு முகாம்களை நடத்திக் கிராமங்கள் கல்வியிற் சிறக்க வழி செய்ய வேண்டும்.

**<u>வினாக்கள்</u>** **5**

1 ) **கல்லாதவருடைய கண்கள் எத்தகையது என வள்ளுவர் கூறுகிறார் ?**

அ) விண்மீன்களுக்கு ஒப்பாகும் ஆ) புண்களுக்கு ஒப்பாகும்

இ) மலர்களுக்கு ஒப்பாகும் ஈ) கயல் மீன்களுக்கு ஒப்பாகும்

2 ) **கிராமங்களில் நிலவி வரும் கொள்கை யாது ?**

அ) ஆண்கள் உழவுத்தொழில் மட்டுமே செய்ய வேண்டும்.
ஆ) எழுபது வயதிற்கு மேல் வாழக் கூடாது.
இ ) பெண்கள் அதிகம் படிக்க வேண்டியதில்லை.
ஈ ) மரக்கறி உணவு மட்டுமே உண்ண வேண்டும்.

3 ) **இந்திய மக்களின் வாழ்க்கை பெரும்பாலும் எங்கே அமைந்துள்ளது ?**

அ) நகரங்களில் ஆ) மாநிலங்களில்

இ) அயல்நாடுகளில் ஈ) கிராமங்களில்

4 ) **கிராமப்பெண்கள் நூறு சதவிகிதம் கல்வியறிவு பெற வேண்டிய அவசியம் யாது ?**

அ) குடும்ப வரவு செலவு அறிய ஆ) ஆடம்பர வாழ்க்கை வாழ

இ) கேளிக்கைகளில் மகிழ்ச்சியடைய ஈ) கிராமத்தை விட்டு நகரம் சென்று குடியேற

5 ) **பாதுகாக்க - என்னும் பொருளை உணர்த்தும் சொல் எது ?**

அ) மேம்பாடு ஆ) பேண

இ) கற்றல் ஈ) முகாம்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

## பகுதி - II

1 ) வீரதீரச் செயல் செய்ததால் வீரவிருது பெறத் தேர்வு செய்யப்பட்ட உனது தோழன்/ தோழி... பாராட்டிக் கடிதம் எழுதுக.

( அல்லது )

நீ குடியிருக்கும் பகுதியில், பழுதடைந்துள்ள தெருவிளக்குகளைச் சரிசெய்து தர வேண்டி மின்சாரத்துறை ஆய்வாளருக்குக் விண்ணப்பம் எழுதுக.

**எக்கடிதமாயினும் உமது முகவரி,**

அருண் / அருணா , 41 சிதம்பரம் தெரு, மணப்பாறை, திருநெல்வேலி மாவட்டம்.

2 ) **கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளில் ஏதேனும் ஒன்றிற்குக் கட்டுரை எழுதுக.** 8

அ) முன்னுரை - தொழில்கள் - அவற்றின் வகைகள் - தொழிற்பயிற்சி - உற்பத்திப்பெருக்கம் - - விற்பனையில் புதிய அணுகுமுறைகள் - முன்னேற்றம் அடைதல் - முடிவுரை.

ஆ) முன்னுரை - இந்திய நதிகள் - பாயும் நிலப்பகுதிகள் - பல்வேறு பருவ காலங்கள் - நீர் கடலில் கலத்தல் - பயனுள்ள வகையில் நீர் ஆதாரத்தைச் சீர்படுத்தத் திட்டமிடல் - முடிவுரை.

இ ) முன்னுரை - அறிவியல் வளர்ச்சி - அன்றாட வாழ்வில் அறிவியல் - பயன்கள் - அறிவியல் கண்டுபிடிப்புகள் - மின்சாரம் - மின்விசிறி - தொலைக்காட்சி - கணிப்பொறி - காலை முதல் மாலை வரை - முடிவுரை

3 ) நீ வாழும் பகுதியில் நடந்த கைவினைப்பொருட்கள் கண்காட்சி பற்றிய அறிக்கை ஒன்று எழுதுக.

( அல்லது ) 4

கண்தான முகாம் பற்றிய அறிக்கை ஒன்று எழுதுக.

## பகுதி - III

**அ) சான்று தருக. ( மூன்று மட்டும் )** 3

1 ) **ஔகாரக்குறுக்கம்**

அ) கடலை ஆ) வௌவால்

இ) திண்ணை ஈ) வளையல்

2 ) **தோன்றல் விகாரம்**

அ) கற்சிலை ஆ) பொன்வளையல்

இ) தென்மேற்கு ஈ) பலாச்சுளை

3 ) **இறந்தகால வினையெச்சம்**

அ) படித்து வந்தான் ஆ) ஆடிப்பார்க்கிறான்

இ) சென்று கேட்பான் ஈ) செல்கின்ற கோதை



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

**4 ) விரியுவமை**

அ) முகமதி

ஆ) தேன்மொழி

இ) மலர்ப்பாதம்

ஈ) வேய்புரைதோள்

**5 ) அறியாவினா**

அ) பருப்பு உள்ளதா ?

ஆ) முருகா சாப்பிட்டாயா ?

இ) எட்டுத்தொகை நூல்களுள் புறம் பற்றிய எவை ?

ஈ) மாணவர்களே ! உங்களுக்குச் சீருடை இல்லையோ ?

**ஆ) நிரப்புக. ( மூன்று மட்டும் )** **3**

**1 ) ஒரு வினைமுற்றுச்சொல் எச்சப்பொருளில் வந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது ________________ எனப்படும்.**

அ) தெரிநிலை வினையெச்சம்

ஆ) தெரிநிலை பெயரெச்சம்

இ) குறிப்புப் பெயரெச்சம்

ஈ) முற்றெச்சம்

**2 ) அசைநிலை பொருளில் வரும் அடுக்குத்தொடர் ____________ .**

அ) அன்றே அன்றே

ஆ) வருக வருக

இ) போ போ

ஈ) தீ தீ தீ

**3 ) ஆடத்தெரியுமா? என்னும் வினாவிற்குப் பாடத்தெரியும் எனக் கூறுவது ____________ .**

அ) இனமொழி விடை

ஆ) உறுவது கூறல் விடை

இ) வினா எதிர் வினாதல் விடை

ஈ) மறை விடை

**4 ) உவமையை ____________ எனவும் கூறுவர்.**

அ) உவமானம்

ஆ) உவமேயம்

இ) உவம உருபு

ஈ) உருவகம்

**5 ) கருமை + விழி என்பது ________________ விதிப்படி புணரும்.**

அ) இனமிகல்

ஆ) ஈறுபோதல்

இ) ஆதிநீடல்

ஈ) தன்னொற்றிரட்டல்

**இ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க. ( மூன்று மட்டும் )** **3**

**1 ) மாணவன் ( குறிப்புப் பெயரெச்சம் ஆக்குக )**

அ) நல்ல மாணவன்

ஆ) படித்த மாணவன்

இ) வருகின்ற மாணவன்

ஈ) உண்ணாத மாணவன்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

**2 ) முப்பால் ( தொகையை விரித்தெழுதுக )**

அ) அறம், பொருள், இன்பம் ஆ) தன்மை, முன்னிலை, படர்க்கை

இ) ஆண்பால், பெண்பால், பலர்பால் ஈ) இயல், இசை, நாடகம்

**3 ) மேற்கு + நாடு ( சேர்த்து எழுதுக )**

அ) மேனாடு ஆ) மேற்குநாடு

இ) மேலைநாடு ஈ) மேநாடு

**4 ) கலா சிரித்தாள் ( இரட்டைக்கிளவி சேர்த்து எழுதுக )**

அ) கலா வாய் விட்டுச் சிரித்தாள் ஆ) கலா மனதிற்குள் சிரித்தாள்

இ) கலா கலகலவெனச் சிரித்தாள் ஈ) கலா அழகாகச் சிரித்தாள்

**5 ) இது செய்வாயா ? ( வினாஎதிர் வினாதல் விடை தருக )**

அ) செய்யாமலிருப்பேனா ? ஆ) நீயே செய்.

இ) செய்யேன். ஈ) கை வலிக்கும்.

**ஈ) இலக்கணக்குறிப்பு தருக. ( மூன்று மட்டும் )** **3**

**1 ) நிலங்கடந்தான்**

அ) இயல்புப் பணர்ச்சி. ஆ) திசைப்பெயர்ப் புணர்ச்சி.

இ) பண்புப்பெயர்ப் புணர்ச்சி. ஈ) மகரஈற்றுப் புணர்ச்சி.

**2 ) அவன் விழுப்புரத்தான்**

அ) இடம் - குறிப்பு வினைமுற்று. ஆ) சினை - குறிப்பு வினைமுற்று.

இ) காலம் - குறிப்பு வினைமுற்று. ஈ) குணம் - குறிப்பு வினைமுற்று.

**3 ) பாதமலர்**

அ) உருவகம். ஆ) உவமைத்தொகை.

இ) உம்மைத்தொகை. ஈ) அன்மொழித்தொகை.

**4 ) மீமிசை ஞாயிறு**

அ) ஒருபொருட்பன்மொழி. ஆ) உரிச்சொல்தொடர்.

இ) ஒன்றொழி பொதுச்சொல். ஈ) வெளிப்படை.

**5 ) பலகை**

அ) தனிமொழி. ஆ) தொடர்மொழி.

இ) பொதுமொழி. ஈ) இரட்டைக்கிளவி.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

**உ) சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (மூன்று மட்டும் )**

1 ) அ) மொழிக்கு முதலில் வரும் ஐகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கும்.

ஆ) மொழிக்கு முதலில் வரும் ஐகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒரு மாத்திரை அளவில் ஒலிக்கும்.

இ) மொழிக்கு முதலில் வரும் ஐகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து அரை மாத்திரை அளவில் ஒலிக்கும்.

ஈ) மொழிக்கு முதலில் வரும் ஐகாரம் தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து குறைந்து அரை மாத்திரை அளவில் ஒலிக்கும்.

2 ) அ) சேதாம்பல் = சேய்மை + ஆம்பல்

ஆ) சேதாம்பல் = செய்மை + ஆம்பல்

இ) சேதாம்பல் = செம்மை + ஆம்பல்

ஈ) சேதாம்பல் = சேது + ஆம்பல்

3 ) அ) ஓர் எச்சவினை, பெயரைக் கொண்டு முடிவது பெயரெச்சம் .

ஆ) ஓர் எச்சவினை, வினையைக் கொண்டு முடிவது பெயரெச்சம் .

இ) ஓர் எச்சவினை, வினையைக் கொண்டு முடிவது முற்றெச்சம்.

ஈ ) ஓர் எச்சவினை, பெயரைக் கொண்டு முடிவது வினைச்சொல்.

4 ) அ) பதம், மொழி, கிளவி என்பன, சொல் என்ற பொருள் தரும் பிறசொற்களாகும்.

ஆ) பதம், மொழி, கிளவி என்பன, எச்சம் என்ற பொருள் தரும் பிறசொற்களாகும்.

இ) பதம், மொழி, கிளவி என்பன, உவம உருபுகள் ஆகும்.

ஈ ) பதம், மொழி, கிளவி என்பன, புணர்ச்சி விதிகள் ஆகும்.

5 ) அ) மாடு என்னும் சொல் உயர்திணைப் பொதுப்பெயர் ஆகும்.

ஆ) மாடு என்னும் சொல் அஃறிணைப் பொதுப்பெயர் ஆகும்.

இ) மாடு என்னும் சொல் விரவுப்பெயர் ஆகும்.

ஈ) மாடு என்னும் சொல் பலவின்பால் ஆகும்.

## பகுதி - IV

**அ) பின்வரும் பத்தியைப் படித்து தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன என்பார் மொழிநூலார். இவற்றுள் இலக்கண, இலக்கிய வளமுடைய மொழிகள் மூவாயிரம். இவற்றுள் ஈராயிரமாண்டுகட்கும் மேற்பட்ட வரலாற்றுத் தொன்மையுடைய மொழிகள் சிலவே. அவை தமிழ், சீனம், சமஸ்கிருதம்,



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

இலத்தீன், ஈப்ரு, கிரேக்கம் ஆகியன. இவற்றுள் இலத்தீனும், ஈப்ருவும் வழக்கிழந்து போ
இன்றும் நிலைத்து நிற்கும் மொழி நம் தமிழ்மொழியே. ஒரு மொழி நிலைத்து நிற்பதற்கு அ
பழமையும், வளமையும் மட்டும் போதாது. அம்மொழி பேச்சு மொழியாக, எழுத்து மொழியாக, ஆட்சி மொழியாக, நீதிமன்ற மொழியாக, பயிற்று மொழியாக நிலைபெற்றிட வேண்டும். இலக்கிய வளம், இலக்கண அரண்,மிகுந்த சொல்வளம், வரலாற்றுப் பின்னணி, தனித்தியங்கும் மாண்பு, காலத்திற்கேற்ற புதுமை எனப் பலவகைகளிலும் சிறப்புப் பெற்றிருத்தல் வேண்டும். தமிழ் மொழிக்கு இவை அனைத்தும் பொருந்தும்.

<u>வினாக்கள்</u> **5**

**1 ) இலக்கண, இலக்கிய வளமுடைய மொழிகளின் எண்ணிக்கை ________________.**

அ) ஆறாயிரம். ஆ) மூவாயிரம்.

இ) ஈராயிரம். ஈ) அறுபதாயிரம்.

**2 ) ஈப்ரு என்பது ______________.**

அ) இலக்கிய வளம் இல்லாத மொழி.

ஆ) வரலாற்றுப் பின்னணி இல்லாத மொழி.

இ) வழக்கிழந்து போன இலக்கிய, இலக்கண வளமுடைய மொழி.

ஈ) வழக்கில் உள்ள இலக்கிய, இலக்கண வளமுடைய மொழி.

**3 ) தொன்மை என்பதன் பொருள் ________________.**

அ) புதுமை. ஆ) பழமை.

இ) உரிமை. ஈ) பெருமை.

**4 ) பயிற்று மொழி என்பது ______________.**

அ) கற்பிக்கும் மொழி. ஆ) கற்கால மொழி.

இ) பழமொழி. ஈ) கற்கும் மொழி.

**5 ) உலகில் ஆராயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன எனக் கூறுபவர் __________.**

அ) நில நூலார். ஆ) மொழிநூலார்.

இ) நூலக அதிகாரிகள். ஈ) வானநூல் அறிஞர்கள்.

**ஆ)**

அறத்தினடிப்படையில் தொடங்கியது பழந்தமிழர் வாழ்வு. அறத்தின் வழியே பொருளைக் கண்டது. இவ்வறத்தின் வழியே இன்பத்தையும் எட்டியது. அக்காலத்தே அறம், பொருள், இன்ப வாழ்வைத் தமிழர் பெற்றிருந்தனர். அறத்தைக் கைக் கொண்டதால் வீடு என ஒன்று வேண்டியதாயிற்று. தமிழர் அன்பு வழியினர். அறத்திற்கே அன்பு சார்பு என்பதை நன்கு உணர்ந்திருந்தனர். அன்பைப் போற்றியது போலவே வீரத்தையும் ஏற்றிப் போற்றினர். களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே என்னும் புறப்பாடல் வீரத்தை முதற்கடமையாக்குகிறது. வீரமற்ற ஆடவரை அக்காலப் பெண்டிர் மணந்து கொள்ள விழையார். ஒக்கூர் மாசாத்தியார் என்ற பெண்பாற்புலவர் பெண்களின் பெருவீரத்தைப் பாடுகிறார். முதல்நாள் போரில் தந்தையைப் பறிகொடுத்தாள்.



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

இரண்டாம் நாள் போரில் கணவனை இழந்தாள். மூன்றாம் நாள் போர் தொடர்கிறது. மற பிறந்த மாண்புடையவள் அப்பெண். நெஞ்சம் துடிக்க அவள் பால் மணம் மாறாச் சிறுமகன் தன்னைச் செருக்களம் நோக்கிப் பகைத்திறம் மாய்க்க விடுத்தாள். என்னே அவள் துணிவு.

<u>**வினாக்கள்**</u>

**1 ) பழந்தமிழர் எத்தகைய வாழ்வைப் பெற்றிருந்தனர் ?**

அ) அறமற்ற வாழ்வினை

ஆ) எளிமையான வாழ்வினை

இ) அறம், பொருள், இன்ப வாழ்வினை

ஈ) அடிமை வாழ்வினை

**2 ) களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே - இவ்வாக்கியத்தில் காளை என்பது யாரைக் குறிக்கும் ?**

அ) எருதுவை

ஆ) ஆண் மகனை

இ) பெண் மகளை

ஈ) யானையை

**3 ) எத்தகைய ஆடவரை அக்காலப் பெண்கள் மணந்து கொள்ள விழையார் ?**

அ) உயரமற்ற ஆடவரை

ஆ) பொருளில்லாத ஆடவரை

இ) வீரமற்ற ஆடவரை

ஈ) ஊனமுற்ற ஆடவரை

**4 ) ஒக்கூர் மாசாத்தியார் யார் ?**

அ) வணிகர் குலப் பெண்மணி

ஆ) பெண்பாற்புலவர்

இ) நடன நங்கை

ஈ) மலை நாட்டுத் தலைவி

**5 ) செருக்களம் - பொருள் தருக.**

அ) அமர்க்களம்

ஆ) உப்பளம்

இ) போர்க்களம்

ஈ) சொற்களம்

**இ ) பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து, தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய 4
மாமலை பயந்த காமரு மணியும்
இடைப்படச் சேய ஆயினும் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றி யாங்கு என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலர் ஆகுபவே

<u>**வினாக்கள்**</u>

**1 ) இப்பாடலின் ஆசிரியர் யார் ?**

அ) கணிமேதாவியார்.

ஆ) மிளைகிழான் நல்வேட்டனார்.

இ) கண்ணகனார்.

ஈ) மாணிக்கவாசகர்.



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

**2 ) துகிர் - பொருள் தருக.**

அ) விலை மதிக்க முடியாத    ஆ) அணிகலன்

இ) பவளம்    ஈ) தொடை

**3 ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள உரிச்சொற்றொடர் எது ?**

அ) மாமலை    ஆ) அருவிலை

இ) நன்கலம்    ஈ) இடைப்படச் சேய

**4 ) சாலார் யாருடன் சேர்வர் ?**

அ) சான்றோர்களுடன்    ஆ) சான்றாண்மை இல்லாதவர்களுடன்

இ) நல்லவர்களுடன்    ஈ) கல்வியறிவில் சிறந்தவர்களுடன்

## பகுதி -V

**1 ) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக.** **10**

அ) மேடைப்பேச்சின் கூறுகளை விளக்குக.

ஆ) பெண்ணுரிமைக்கான வழிமுறைகளைப் பெரியார் வழிநின்று விளக்குக.

இ) தமிழ் பெற்றுள்ள செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகளில் ஏதேனும் ஐந்தினைப் பற்றி எழுதுக.

ஈ ) கடல் வாணிகம் மற்றும் உழவுத்தொழில் குறித்து எழுதுக.

**2 ) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக.** **8**

அ ) காலமறிதலை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

ஆ) தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை, நற்றிணைப்பாடல் வழித் தொகுத்து எழுதுக.

இ ) தமிழ் வளர்ச்சி குறித்து பாரதிதாசன் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

ஈ ) கண்ணகிக்கும், பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக.

**3 ) ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் துணைப்பாடக் கட்டுரை எழுதுக.** **8**

அ) மெல்ல மெல்ல மற ! என்னும் சிறுகதையின் மையக் கருத்து மாறாமல் சுருக்கி வரைக.

ஆ) அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.

இ) தொல்லியல் துறை பற்றி எழுதுக.

************************



www.StudentBounty.com
Homework Help & Pastpapers